**மக்கள் வங்கி - 2018**
**----------------------------------**

**1.1 அபிப்பிராயம்**
-------------------------

மக்கள் வங்கியின் (''வங்கி'') மற்றும் அதன் துணைக்கம்பனிகளினதும் (''தொகுதி'') 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனம் ஒன்று எனக்கு உதவியது.

வங்கியினதும் மற்றும் தொகுதியினதும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**
-----------------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**
------------------------------------------------------------------------------------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொகுதி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொகுதியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வங்கி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் மீதான கணக்காய்வின் போது கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடு என்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளபபடுகின்ற கணக்காயவில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவது இல்லை. பிறழ் கூற்றுக்கள் ஆனவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடும் என்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்தில் எடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர் தொழில் ஐயப்பாட்டினை பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி தொகுதியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில்,

நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொகுதி தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வங்கியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் வங்கி இணங்கியிருந்ததா என்பதும்,

- வங்கியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வங்கியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெற வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 07 பேரேட்டுக் கணக்குகள் தொடர்பில் நீண்ட கால நிலுவை மீதியாக காணப்பட்ட ரூபா 24,048,256 தொகையை மிளப் பெற கூடிய மற்றும் இருப்பு தொடர்பாக சரிபார்க்க முடியாதிருந்தது. | ஜி/எல் 397020 ஏற்கனவே தீர்க்கப்பட்டது தேவையான அளவீடுகள் தற்போது இந் நிலுவையை தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | இம் மீதிகளை மீளாய்வு செய்து தீர்பனவு செய்வதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் |

### 1.5.2 செலுத்த வேண்டியவை

| கணக்காய்வு விடயம் | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | டெஸ்டொப் பப்லிஷின் டிபார்ட்மன்க்கு செலுத்த வேண்டிய ரூபா 5,221,467 தொகையானது நீண்டகால நிலுவையாக தொங்கல் கணக்கில் வழங்குநருக்கு செலுத்த வேண்டிய தொகையாக இருந்தது. | சரி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | இம் மீதிகளை மதிப்பாய்வு செய்து தீர்ப்பதற்கான முறையான நடவடிக்கைகளை எடுக்கவும். |
| (ii) | 2018 டிசெம்பர் 31 இல் ரூபா 4,187,382 பெறுமதியான வேறுபாடொன்று VAT வருமானம் மற்றும் VAT கொடுப்பனவு பேரேட்டுக் கணக்குகளில் காணப்பட்டது. | அமைப்பு தன்னியக்க முறையில் VAT மற்றும் NBT பெறுவனவுகளை பதிவு செய்கின்றது. இருப்பினும், சில வேளைகளில் கிளைகள் VAT மற்றும் NBT நேரடியாக சேகரிக்கின்றன. எனவே கணனி தரவு பேரேட்டுடன் இனங்கவில்லை. VAT மற்றும் NBT கைமுறையாக சேகரிக்கப்படும் எப்சிபீயூ நடவடிக்கைகளுக்கும் இது பொருந்தும்.<br><br>எவ்வாறாயினும், இந்த ஒழுங்கின்மையை அகற்றுவதற்கான ஒரு பொறி முறையை உருவாக்கும் பணியால் வங்கி தற்போது உள்ளது. | இந்த ஒழுங்கின்மையை உடனடியாக அகற்ற ஒரு பொறி முறையை உருவாக்க வேண்டும். |

### 1.6 தொடர்புள்ள தரப்பினர்கள் மற்றும் தொடர்புள்ள தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை.

| கணக்காய்வு விடயம் | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ஒன்றினைக்கப்பட்ட வங்கியின் அமைப்பில் தொடர்புள்ள தரப்பினர்களின் கொடுக்கல் வாங்கல்கள்களை அறிந்து கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கவில்லை. | மேற்பாட்டு நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. இயக்குநர்கள் குழுவில் ஒப்புதலுடன் தொடர்புடைய தரப்பினர்களின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கொள்கை வைக்கப்பட்டுள்ளது. அதன்படி, சபை ஒருங்கிணைந்த இடர் முறைமை குழு இற்கமைய பரிவர்த்தனைகள் மதிப்பாய்வு செய்யும் பணியால் ஈடுபட்டுள்ளது.<br>மாதாந்த அடிப்படையில் தொடர்புள்ள தரப்பினர்களின் கொடுக்கல் வாங்கல்லொன்றை இணம்கான ஒரு வழிமுறை மேற்கொள்ளப்படுகின்றது. | இந்த குறைகளை நிவர்த்தி செய்வதற்கும், செயல் முறையை ஒழுங்குபடுத்துவதற்கும் மற்றும் சரியான கொள்கை ஆவணப்படுத்தப்படும் வரை உறுதிப்படுத்த நிர்வாகம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம். |

எந்தவொரு சந்தேகத்தையும் தவிர்ப்பதற்கு இந்த தொடர்பில் மேலும் முன்னேற்றம் அவசியம் மற்றும் கூறப்பட்ட நோக்கத்திற்கான முயற்சிகள் தற்போது முறையாக செய்யப்படுகின்றன.

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | இலங்கை மத்திய வங்கியின் (சிபிஎஸ்எல்) 4(5) பிரிவு வழிகாட்டலுக்கு அமைய 30% - 70% விதிமுறைமைக்கு இணங்காமை | மொத்த கடன் வசதிகள் செயல்படாத கடன்கள் (எஸ்.பி.எல்) என வகைப்படுத்தப்பட வேண்டும் எஸ்.பி.எல் என வகைப்படுத்தப்பட்ட மொத்த கடன் வசதிகளில் 30 சதவீதத்தை தாண்டும் போது ஒரே கடன் வாங்கி பலருக்கு பல கடன் வசதிகள் வழங்கப்பட்ட போது அத்தகைய வாடிக்கையாளர்களுக்கு பல் கடன்கள் எஸ்.பி.எல் என வகைப்படுத்தப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டின் பெறுமதிக்குள் தீர்க்கும் இலக்கை கொண்டு ஆராயப்படும். | எஸ்.பி.எல் வகைப்படுத்துவது தொடர்பான 30% - 70% விதிமுறைமைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | செயலற்ற கடன் வகை தொடர்பான 2008 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க வங்கிச் சட்ட வழிகாட்டலின் 4(2) III ஆம் பிரிவின் படி | அதிகூடிய செலுத்த வேண்டிய நிலுவை நாட்களின் எண்ணிக்கை 180 நாட்களுக்கு மேல் செல்லும் போது அவ் வாடிக்கையாளர் செயலற்ற கடன் வகைப்படுத்தலுக்குட்பட வேண்டி இருப்பினும் பல வசதிகள் 180 நாடகளுக்கு மேற்பட்டும் நிலுவைத் தொகையை கொடுப்பனவு செய்யாத போதிலும் அவர்களை செயலற்ற கடன் வகைக்குட்படுத்தவில்லை. | இவ் விடயமானது தற்போது நியாயமான முறையில் சாத்தியமான நேரத்தில் தீர்க்க இலக்கைக் கொண்டு ஆராயப்படுகின்றது. | கூறப்பட்ட வழிகாட்டலுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | வங்கியின் சுற்றறிக்கை இலக்கம் 6970/2010 துணை பொது முகாமையாளர் (செயற்பாடுகள்) | இளை ஆறு மாதங்களுக்கு மேல் நிலுவையிலுள்ள கணக்குகளை "தொங்கல் கணக்கு – கடன்கொடுத்தோர்" உடனடியாக "உரிமைக் கோரப்படாத இருப்பு கணக்கு" க்கு மாற்ற வேண்டும். இருப்பினும் கிளைக் கணக்காய்வின் போது ஆறு மாத காலத்தைத் தாண்டிய தொங்கல் கடனாளிகளில் சேர்க்கப்பட்ட அதிகப்படியான பண நடவடிக்கைகள் அந்தக் கணக்கிற்கு மாற்றப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது. | இவை அனைத்தும் கவுன்டரில் அதிகப்படியாக பெற்றுக்கொண்ட பணமல்ல. ஏடிஎம், சிடிஎம் என்பவற்றிலும் மேலதிகமாக பெறப்பட்ட பணமாகும். எனவே எம்மால் இத் தொகையை உரிமை கோரப்படாத இருப்புக் கணக்கிற்கு மாற்ற முடியாதுள்ளது.<br><br>இந் நிலுவைத் தொகையை விரைவில் தீர்ப்பனவு செய்ய NOVUS நிறுவனத்திற்கு அறிவித்துள்ளோம் | இத் தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளவும். |
| (iv) | துணை பொது முகாமையாளர் சுற்றறிக்கை இலக்கம் 5208/99 | போலி நகைகள் அடகு தொடர்பாக உரிய பிரதேச காரியலயத்திற்கு அறிக்கை ஒன்றை வெளிப்படுத்துவதன் மூலம் ஏற்பட்ட நட்டத்தை காப்பீட்டின் மூலம் பெற்றுக்கொள்ளலாம். இருப்பினும் கிளைக் கணக்காய்வின் போது எவ்வித காப்பீட்டுப் பெறுவனவும் கிடைத்திருக்கவில்லை. அல்லது கடிதங்கள் பிரதேச காரியாலயத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. (RHO) | நாங்கள் நிதித்துறை-காப்பீட்டுக்கு ஒரு கடிதத்தை அனுப்பியுள்ளோம் காப்பீடு, இந்த விபரம் பற்றி விசாரித்து ஆவண சான்றுகள் ஏதேனும், இருந்தால் அவற்றை சேகரிக்க நாங்கள் முயற்சிப்போம். | கிளைகள் மற்றும் ஆர்.எச்.ஓ க்களில் உள்ள அனைத்து முகாமையாளர்களும் தொடர்புடைய சுற்றிக்கைகளை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும். |
| (V) | வங்கியின் சுற்றறிக்கை பொது அறிவித்தல் சுற்றறிக்கை இலக்கம் 688/2003(88) | சேவை மையங்களுக்குப் பொறுப்பாக முகாமையாளர் மற்றும் அதிகாரிகள் நாளாந்த அடிப்படையில் முற்பணங்கள் வழங்கப்பட்ட நகைகளுக்கிடையில் ஆகக் குறைந்தது 10 சதவீதத்தை மாதிரி அடிப்படையில் தெரிவு செய்வதன் மூலம் அவற்றை பௌதீக | முகாமையாளரால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் திறைசேரி இருப்பு புத்தகத்தில் பதிவு செய்யப்பட்ட தங்க நகைகளின் துல்லியத்தை பௌதீக ரீதியாக சரிபார்க்கினறர். | அனைத்து கிளை முகாமையாளர்கும் தொடர்புடைய சுற்றிக்கையை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும். பல நிகழ்வுகளின் போது முகாமையாளர்கள் இதனை கடைபிடிக்க தவறியமை அவதானிக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரீதியில் பரீட்சித்து அதனுள் உள்ளடங்கியுள்ள தங்கத்தின் உண்மைத் தன்மையான உறுதிபடுத்தி மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையால் வழங்கப்பட்ட வடிவத்தில் மாற்றல் புத்தகத்தை பராமரிக்க வேண்டும். எனினும், வங்கியின் கிளைகள் சில சந்தர்ப்பத்தில் இதனை கடைப்பிடிக்கவில்லை. | | |
| (vi) | வங்கியின் கடன் நடைமுறை கையேட்டின் 9.3.1 ஆம் பிரிவின் படி | வங்கி மேலதிகப்பற்று வசதியை பெறுவதற்கு தகுதி பெறுவதற்காக ஆகக் குறைந்தது. ஆறு மாத காலப்பகுதிக்கு திருப்தி வாய்ந்த நடைமுறை வைப்புக் கணக்கினைப் பேணுவதற்கு வேண்டப்பட்டது. எனினும், சில சந்தர்ப்பங்களில் வங்கி மேலதிகப்பற்று வசதியை மேற்கூறப்படட அறிவுறுத்தல்களுக்கு முரணாக வழங்கியிருந்தது. | TOD கள் 90 நாட்களுக்கு முன்னர் தீர்க்கபட்ட வாடிக்கையாளர்கள் அவர்களின் வனிகத்தின் மோசமான போக்கு காரணமாக 30 நாட்களுக்கு முன்னர் தீர்ப்பதற்கு தவறிவிட்டனர். | குறைந்த பட்ச தகுதிகளைக் கொண்டோருக்கே மட்டுமே வசதிகளை வழங்க வேண்டும். |
| (vii) | வங்கி சுற்றறிக்கை முகாமையாளர் சுற்றறிக்கை இலக்கம் 614/2007(4) | தற்காலிக மேலதிகப்பற்றானது (TOD) காலதாமதாமின்றி மீளப் பெற்றுக் கொள்ள வேண்டும். எனினும், TOD வசதிகளை மீளப் பெறுவதில் குறிப்பிடத்தக்க காலதாமதமானது அவதானிக்கப்பட்டது. | TOD இன் 90 நாட்களுக்கு முன்னர் தீர்க்கப்பட்டன. வாடிக்கையாளர்களின் மோசமான வணிக போக்கு காரணமாக 30 நாட்களுக்கு முன்னர் தீர்ப்பதற்கு தவறியிருந்தனர். | கிளை முகாமையாளர்களால் TOD களை மீட்பதற்கான நெருக்கமான பின் தொடர்தல் நடவடிக்கைகளை செயல்படுத்த வேண்டும். |
| (viii) | 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பண மோசடி தடுப்புச் சட்டம் | பண சேமிப்பு அல்லது பயங்கரவாத நிதி நோக்கங்களுக்காக கடன் அட்டைகளை துஷ்பிரயோகம் செய்வதை தவிர்ப்பதற்கு கடன் அட்டைகளை முன்வைத்து அதிக கட்டணம் செலுத்துவதனை உன்னிப்பாக கண்கானிக்க வேண்டும். மேலும், | தற்போது கடன் அட்டை மையம் ஏற்கனவே பணம் செலுத்துவதை தடுக்க கணனி கட்டுப்பாடுகளை வைத்துள்ளது வாடிக்கையாளர்கள் செலுத்திய தொகையை திருப்பிச் செலுத்த ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடன் அட்டைகளை துஷ்பிரயோகம் செய்வதனை தவிர்ப்பதற்கு கடன் அட்டைகளின் முன் செலுத்துதல் / அதிக கட்டணம் செலுத்துவதனை உன்னிப்பாக கண்கானிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகளை அடையாளம் கண்டு மதிப்பீடு செய்ய வேண்டும். இருப்பினும் அத்தகைய கண்காணிப்பு திறம்பட செயல் படவில்லை. | |

**1.8 காசு முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பஹா பிராந்திய அலுவலகத்தில் சிதைவடைந்த பணத்தின் பௌதீக பரிசோதனையின் போது ரூபா 135.4 மில்லியன் பெறுமதியான சிதைவடைந்த நாணயத்தாள்கள் 2018 மே 21 திகதியன்று கையிருப்பில் இருந்தது.<br><br>ஆறு மாத காலத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 80.8 மில்லியன் தொகையை தலைமை காரியாலயத்திற்கு அனுப்பியதன் பின்னர் இந்த 4 மாதங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றைக் காணக்கூடியதாக இருந்தது. | அரசாங்கம் ஒரு தூய்மையான தாள்களுக்கான கொள்கையை கடைப்பிடிப்பதால் இத்தகைய குறிப்பில் வங்கி மிகவும் கண்டிப்பாக இருப்பதனால் சேதமடைந்த மற்றும் பழுதடைந்த நோட்டுக்களின் அளவில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. | சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளை தொடர்பு கொள்வதன் மூலம் முறையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

**1.9 வரி பிரமாணங்களுக்கு இணங்காமை**

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்வரி (வற்) மற்றும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் | சில வருமானங்கள் மீது வங்கியானது VAT வரியை சேகரித்திருக்காததனால் வருமானம் மீதான வெளீயீட்டு வரியான ரூபா 19,412,393 ஐ வங்கி தாங்க வேண்டி ஏற்பட்டது. | தன்னியக்க முறையில் வங்கியால் VAT மற்றும் NBT சேகரிக்கபடுகின்றன. இருப்பினும் சில வேலைகளில் கிளைகளில் VAT மற்றும் NBT நேரடியாகவும் சேகரிக்கின்றன. இதனால் கணினி தரவு பேரேட்டுடன் பொருந்தவில்லை VAT மற்றும் NBT சேகரிப்பு முறைமையானது FCBU நடவடிக்கைகளுக்கு பொருந்தும் எவ்வாறாயினும், இந்த ஒருங்கின்மையை அகற்றுவதற்கான ஒரு பொறி முறையைம உருவாக்கும் பணியில் வங்கி தற்போது உள்ளது. | செலுத்த வேண்டிய VAT உடன் வருவாய் கணக்குகளை ஒத்துப்பார்த்து பரீசிலிக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 2009 இன் 9 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அதிகாரச் சட்டம் மற்றும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் | இச் சட்டததின் படி "பொறுப்பான வருமானம்" என்பது இலங்கையில் சேவை வழங்குவதிலிருந்து பெறப்பட்ட அல்லது பெறத்தக்க தொகையாகும். அதன்படி சேகரிக்கப்பட்ட NBT பொறுப்பான வருவாயின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். வங்கி தனது வாடிக்கயைாளர்களிடமிருந்து NBT யை சேகரித்து அத்தகைய தொகை வருவாயின் ஒரு பகுதியாக கருதப்படவில்லை எனவே NBT செலவு ரூபா 763,695 ஆல் குறைத்து மதிப்பிடப்பட்டது. | தன்னியக்க முறையில் வங்கியால் VAT மற்றும் NBT சேகரிக்கபடுகின்றன. இருப்பினும் சில வேலைகளில் கிளைகளில் VAT மற்றும் NBT நேரடியாகவும் சேகரிக்கின்றன. இதனால் கணினி தரவு பேரேட்டுடன் பொருந்தவில்லை VAT மற்றும் NBT சேகரிப்பு முறைமையானது FCBU நடவடிக்கைகளுக்கு பொருந்தும் எவ்வாறாயினும், இந்த ஒருங்கின்மையை அகற்றுவதற்கான ஒரு பொறி முறையைம உருவாக்கும் பணியில் வங்கி தற்போது உள்ளது. | இந்த ஒழுங்கின்மையை அகற்ற ஒரு பொறிமுறையை உருவாக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 24,406 மில்லியன் தொகையான இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 25,913 மில்லியன் தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 1,507 மில்லியன் தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வட்டி செலவினம், குறைபாட்டுக் கட்டணம், தனிப்பட்ட செலவுகள், மற்றும் ஏனைய செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு முறையே ரூபா 12,316 மில்லியன், ரூபா 5,969 மில்லியன் ரூபா 4,677 மில்லியன் மற்றும் ரூபா 2,311 மில்லியன் ஏனைய இயக்க வருமானத்தில் ஏற்பட்ட ரூபா 405 மில்லியன் குறைவு என்பன இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும்.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

நிகர வட்டி வருமானம் மற்றும் வங்கியின் வர்த்தகத்தின் நிகர இலாபம் முன்னைய ஆண்டை விட முறையே ரூபா 9,634 மில்லியன் அல்லது 19.1 சதவீதத்தால் மற்றும் ரூபா 1,773 மில்லியன் அல்லது 63.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. நிகர இயக்க வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 6,754 மில்லியன் அல்லது 11.2 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இழப்பு அனுகு முறையிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு அனுகு முறைக்கு குறைபாடு வழங்கல் முறையை மாற்றுவதன் காரணமாக கடன் மற்றும் பிற இழப்புக்களுக்கான குறைபாடு கட்டணங்கள் ரூபா 5,969 மில்லியன் அல்லது 442.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. 2018 ஜனவரி 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் கூட்டு ஒப்பந்தங்களின் படி ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பள உயர்வு காரணமாக வங்கியின் தனிப்பட்ட செலவுகள் ரூபா 4,677 மில்லியன் அல்லது 30.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

------------------------------------------

உரிமம் பெற்ற வனிக வங்கிகள் தொடர்பில் மத்திய வங்கியின் ஆண்டு புள்ளி விபரங்கள் ஒப்பிடும் போது மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான வங்கியின் சில முக்கியமான கணக்கியல் விகிதங்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் சராசரி சொத்துக்களின் வருவாய் மற்றும் பங்கு மீதான வருவாய் முறையே 21.05 சதவீதம் மற்றும் 23.7 சதவீதம் குறைத்துள்ளது.

(ii) 2018 ஆம் ஆண்டில் அடுக்கு 1 (Tier 1) மற்றும் மொத்த மூலதனம் போதுமான விகிதங்கள் 11.1 சதவிகிதம் மற்றும் 14.5 சதவிகிதம் வரை அதிகரித்திருந்தாலும் இது துறை விகிதத்தைவிட சிறிதளவு குறைவை முறையே 0.8 சதவிகிதம் மற்றும் 0.5 சதவிகிதம் என்று குறிக்கின்றது.

(iii) உரிமம் பெற்ற வனிக வங்கியின் வட்டி வருமானம் 2018 ஆம் ஆண்டிற்கான ரூபா 948,171 மில்லியனாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்கூறியவற்றிற்கான வங்கியின் பங்களிப்பு ரூபா 171,135 மில்லியன் அல்லது 18 சதவீதம் ஆகும். 2018 ஆம் ஆண்டிற்கான அனைத்து உரிமம் பெற்ற வணிக வங்கியின் மேலும் இலாபம் ரூபா 119,527 மில்லியனாகவும், மேற்கண்டவற்றிற்கான வங்கியின் பங்களிப்பு ரூபா 17,095 மில்லியன் அல்லது 14.3 சதவீதமாகவும் இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

------------------------------------

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

------------------------------------------------------------------

**3.1.1 தவறான வாகனப் பயன்பாடு**

------------------------------------------------

**கணக்காய்வு விடயம்**

------------------------------

வங்கியின் ஒதுக்கப்பட்ட வாகனங்கள் வங்கியின் ஓய்வு பெற்ற / ராஜினாமா செய்த அதிகாரிகளால் ஓய்வு பெறும் போது அந்த வாகனங்களை வங்கிக்கு ஒப்படைக்காது இன்னமும் பயன்டுத்துகின்றார்.
மேலே குறிப்பிடப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்துவதற்கான ஒப்புதல் தலைமை நிர்வாக அதிகாரியில் (CEO) இயக்குநர் குழுவின் முன் ஒப்புதல் இல்லாமல் வழங்கப்பட்டது. பின்னர் அவற்றை சரி செய்ய சபைக்கு அனுப்பப்பட்டது.

| பதவி நிலை | ராஜினாமா / ஓய்வுபெற்ற தேதி | ஒதுக்கப்பட்ட வாகன எண் | வாகனம் ஒப்படைக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|
| தலைவர் - திரு.ஹேமசிறி பெர்னான்டோ | 2018.10.22 | KR-0117 | 2018.11.02 |
| தகவல் தொழில்நுட்பத் தலைவர் திரு. சதாமல் | 2019.04.01 | CAH- 0702 | 2019.07.24 |
| Dgm – சர்வதேச | 2019.04.01 | CAG-3450 | இன்னமும் |

**முகாமைத்துவத்தின் கருத்துரை**

------------------------

தகவல் தொழில்நுட்ப தலைவர் பயன்படுத்திய வாகனம் 24.07.2019 அன்று வங்கிக்கு திருப்பி அனுப்பப்பட்டது.

முன்னால் டிஜிஎம் (சர்வதேச வங்கி) மற்றும் முன்னால் தலைமை நிர்வாக அதிகாரி / ஜிஎம் பயன்படுத்திய வாகனங்கள் 50 சதவீத மதிப்பை செலுத்திய பின்னர் அவர்களுக்கு வழங்க BP No.487/2019 இல் முடிவு எடுக்கப்பட்டிருந்தது.

**பரிந்துரை**

----------------------

வங்கியின் வாகனத்தை கையாளுவதி வெளிப்படைய பொருளாதார மற்றும் தனித்துவமான கொள்கைகளை நிறுவ வே பண தீர்வு ம முடிவு செய் முன் த மதிப்பபுடன் வாகனத்தின் மதிப்புக்கு இடையிலான ஒப்பீட்டை செய்ய வேண்

| | | | |
|---|---|---|---|
| வங்கி | | | ஒப்படைக்கவில்லை. |
| திருமதி.எஸ்.பிரதாபசிங்க தலைமை நிர்வாக அதிகரி – திரு . வசந்தகுமார | 2019.04.15 | CAI- 4646 KM-9238 | இன்னமும் ஒப்படைக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| பி.எச்.ஆர். ஆர்.சி தாள் இலக்கம் 51/2018 மூலம் மூத்த துணை பொது முகாமையாளர்களுக்கும் துணை பொது முகாமையாளர்களுக்கும் ஒரு புதிய வாகன கொடுப்பனவு மற்றும் வாகன கடனுக்கு குழு 2018 ஒக்டோபர் 10 அன்று ஒப்புதல் அளித்துள்ளது.<br><br>இந்த கடன் திட்டததிற்கு 5 சதவீத வட்டி அறிமுகப்படுத்தப்பட்டது. இது தற்போதுள்ள வாகன கடன் வட்டி விகிதத்தை விட 1.5 சதவீதம் குறைவாகும். சபை 2019 மே 17 அன்று கடன் திட்டத்தை ஒப்புதல் அளித்திருந்தாலும் ரூபா 215.5 மில்லியனுக்கும் அதிகமான 12 கடன்கள் சபை அனுமதிக்கு முன்னரே வழங்கப்பட்டிருந்தது. | பி.எச்.ஆர்.ஆர்.சி 5 சதவீத வட்டி விகிதத்தை ஒப்பீட்டளவில் குறைந்த எண்ணிக்கையிலான கடன்களைக் கருத்தில் கொண்டு ஊக்கத் தொகையை வழங்க 25 க்கும் குறைவான கடன்களுக்கு வழங்க முடிவு செய்தது.<br>வட்டி விகிதங்களை திருத்துவது உட்பட வட்டி விகிதத்தை தீர்மானிக்கும் விருப்பம் பி.எச்.ஆர்.சி க்கு உள்ளது. 2018 மே 16 அன்று நடைபெற்ற பி.எச்.ஆர்.சி கூட்டத்தின் அறிக்கை இயக்குநர் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. | முக்கிய செயல்பாட்டு முடிவுகளை அமுல்படுத்து முன்பு ச ஒப்புதல் பெ வேண்டும். |
| மேற்கண்ட வாகன கடன் திட்டதின் நிபந்தனைகளில் படி, நிர்வாகிகள் ஓய்வு ஒப்பந்த காலாவதிக்கு முன்னால் குறைத்தது 2 வருட சேவைக் காலம் இருக்க வேண்டும். இந்த நிபந்தனைகளுக்கு மாறாக வங்கியில் பணியாற்றிய 2 ஆண்டுகள் முழுமையாகாத மூத்த நிர்வாகிகளுக்கு வங்கி கடன்களை வழங்கியிருந்தது. | 2018.10.10 அன்று நடைபெற்ற பி.எச்.ஆர்.ஆர்.சி கூட்டத்தில் வங்கியின் அதிகாரிகளின் நீண்ட மற்றும் அர்பனிப்பு சேவையை கருத்தில் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட கடன் திட்டத்திற்கு பி.எச்.ஆர்.ஆர்.சி விதிவிலக்கு அளித்தது. இது பி.எச்.ஆர்.ஆர்.சி இன் முன் ஒப்புதலுடன் செய்யப்பட்டது. | சுற்றறிக்கையி விதிகள் கண்டிப்பாக கடைபிடிக்கப் வேண்டும். |

### 3.1.2 ஒப்பந்த பணியாளர் ஊதியம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (i) ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பில் ஒப்பந்த நிபந்தனைகளின் படி முன்னால் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் மூத்த துணை பொது முகாமையாளர் (மொத்த விற்பனை வங்கி) என்போருக்கு முறையே 2017 மார்ச் 30 மற்றும் 2017 ஒக்டோபர் 2 ஆம் திகதிகளில் ரூபா 36,620,606 மற்றும் 38,400,343 சம்பள உயர்வு நிலுவையானது கட்டணக் கணக்கினூடாக செலுத்தப்பட்டிருந்தது. எனினும், வங்கி காலாவதியாகும் ஒப்பந்தங்களின் விதிமுறைகளை புதுப்பித்திருத்தலும் ஆரம்ப சம்பளத்தின் அடிப்படையில் சம்பள உயர்வு கருதப்படாது வழங்கப்பட்டுள்ளது. காலங்களுக்கு ஏற்ப தனி ஒப்பந்தங்களால் கையெழுத்திட்டப்பட்டு நிர்வகிக்கப்படுவதால் இக் கட்டணத்தை செலுத்துவதற்கு அவர்களுக்கு உரிமை இல்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | முரண்பாடான கொடுப்பனவுகளைத் தவிர்க்க ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும். |
| (ii) பொது முயற்சிகள் திணைக்களத்துடனான ஒருங்கிணைப்பு பணிகளை ஒப்பந்த அடிப்படையில் ஆறு மாத காலத்திற்கு மேற்கொள்ளுதல் தொடர்பாக 2017 ஏப்ரல் 27 மற்றும் 2018 ஏப்ரல் 18 ஆகிய திகதிகளில் நடைபெற்ற பி.எச்.ஆர்.ஆர்.சி குழு கூட்டங்கள் மூலம் திருமதி. ஏ.சேகர் மற்றும் திருமதி. பி.சி.கே.மென்டிஸ் என்போருக்கு முறையே ரூபா 75,000 மற்றும் ரூபா 100,000 மற்றும் எரிபொருள் கொடுப்பனவு மாதத்திற்கு ரூபா 30,000 செலுத்த வங்கி முடிவு செய்திருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | உரிமக் கொடுப்பனவுகளுடனான கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும். |

எவ்வாறாயினும், அத்தகைய ஊழியர்களின் தேவை குறித்து கணக்காய்வாளருக்கு சந்தேகம் உள்ளது. மற்ற அரசாங்க வங்கிகள் அத்தகைய ஊழியர்களை நியமிக்கவில்லை.

### 3.2 இணங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(i) போலி நகைகள்**<br><br>திரு மொஹமட் சமீர் மீதி 2005 ஆம் ஆண்டில் 96 போலி வளையல்கள் வங்கியில் அடகு வைத்தல் தொடர்பில் நீதிமன்ற வழக்கு இருந்தது. அவர் இந்த மோசடியை 2005 ஜீலை 25 முதல் ரூபா 9,500 அடகு பெறுமதியான 01 பவுன் வளையலை ரூபா 9,787 மதிப்பீடு செய்திருந்தது.<br><br>இந்த குற்றம் சாட்டப்பட்டவர் ஒவ்வொரு நாளும் 96 வளையல்கள் வரை அடகு பிடிக்கும் அதிகாரியின் உதவியுடன் தொடர்ந்து அடகு செய்துள்ளார். மேலும் நகைகளின் மதிப்பீட்டு பெறுமதியிலும் பார்க்க 90 சதவீதத்திற்கும் மேலாக அவருக்கு வழங்கப்பட்டிருந்தது.<br><br>இருப்பினும் நீதிமன்ற உத்தரவைப் பெற்ற பிறகு வழங்கப்பட்ட ரூபா 991,200 இல் ரூபா 320,600 மட்டுமே உரிய வட்டியின்றி மீட்கப்பட்டது. நீதிமன்றதில் ஒப்படைக்கப்பட்ட நகைகள் தொடர்பில் வங்கி எந்வொரு ஆவணப் பதிவையும் பேணவில்லை மேலும் பதிநான்கு போலி நகைகள் வங்கியின் பாதுகாப்பு லாக்கரில் இருந்த போதும் இது தொடர்பில் நகை அடகு கையேட்டின் 13 ஆம் பிரிவின் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | காப்பீட்டுத் தொகை மேற்கண்ட நகைகளுக்கான உரிமை கோரலாக இருந்ததால், விசாரிக்க நாங்கள் ஏற்கனவே நிதித் துறைக்கு அறிவித்துள்ளோம் | இழப்புக்கு உரிமை கோர தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

(ii) **வெளிநாட்டு காசோலை கொள்முதல்**

--------------------------------------------------------

லிபர்டி பிளாசா கிளையின் முன்னால் கிளை முகாமையாளர், 2008 டிசெம்பர் 31 அன்று காங்கோ அராலியா (பிரைவேட்) லிமிடட் இயக்குனருடன் 750,000 அமெரிக்க டொலர் மதிப்புள்ள வெளிநாட்டு வங்கி வரைவை வாங்குவதில் மோசடி செய்திருந்தார்.

பிராந்திய தலைமை அலுவலகத்தின் செயற்பாட்டு முகாமையாளர்களின் அறிவுறுத்தல்களுக்கு மாறாக கிளை இந்த வரைபை ரூபா 84,083,122 க்கு பெற்றிருந்தது. முகாமையாளர் அந்த வங்கி வரைவை தனது அங்கீகார வரம்பை மீறி வங்கியின் வெளிநாட்டு நாணய பிரிவில் இருந்து இந்த காசோலையின் நம்பகத்தன்மையை சரிபார்க்காமல் வாங்கியுள்ளனர்.

முகாமையாளர் இந்த வாடிக்கையாளருக்கு தனது கணக்கிலிருந்து ஒரே நாளில் ரூபா 53,700,212 ஐ பெற்றுக்கொள்ள அனுமதித்திருந்தார். எவ்வாறாயினும், இந்த வரைவு 2009 ஜனவரி 21 இன்று திருப்பி அனுப்பப்பட்டது. மற்றும் ஆர்.பி.சீ ராயல் வங்கி 2009 பெப்ரவரி 4 திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் இது சாதாரண சேகரிப்பின் போது காணாமல் போனது என்றும் இதற்கான செலுத்துகையை தடைசெய்திருப்பதனையும் தெரிவித்திருந்தனர்.

2009 ஆகஸ்ட் 13 திகதியிட்ட கடிதத்தில் மூலம் முகாமையாளர் இந்த நடவடிக்கையை மேற்கொண்ட வாடிக்கையாளருடன் வேண்டுமென்றே செய்தாக குற்றவியல் புலனாய்வுத் துறை தெரிவித்திருந்தது.

செலின்கோ காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து (50%) இழப்பைக் கோர சட்ட நடவடிக்கை தொடங்கப்பட்டது.

இழப்பை கோருவதற்கு சட்ட நடவடிக்கைகள் சரியான நேரத்தில் பின்பற்றப்பட வேண்டும் மற்றும் வங்கி ஊழியர்கள் தகவல் தொழிலிலுள்ள நெறிமுறை அம்சங்களை முறையாக கடைப்பிடிக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| இதன் விளைவாக வங்கி ரூபா. 86,776,575 ஐ 2011 ஆம் ஆண்டு இலாபத்திலிருந்து பதிவழிப்பு செய்திருந்தது. அத்துடன் காப்பீடு கோர பல முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அது வெற்றிப் பெறவில்லை.<br>மேலும் வங்கியில் இந்த காசோலை வெளிநாட்டு காசொலை கொள்முதல் கிளை பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை. | | |

### 3.3 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) வங்கியின் கிளை வலையமைப்பு 2018 ஆம் ஆண்டில் ரூபா 10,904 மில்லியன் இலாபம் ஈட்டியுள்ளது. 199 கிளைகளால் ரூபா 75,145 மில்லியன் இலாபம் ஈட்டப்பட்டது. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் 157 கிளைகளால் ரூபா 64,241 மில்லியன் இழப்பு ஏற்பட்டது. | அவதானிக்கப்பட்டது. | நட்டம் ஏற்பட்ட கிளைகளை இலாபம் ஈட்டும் வகையில் மாற்றம் வேண்டும். |
| (ii) எம்.எஸ்.எல் (பிரைவட்) லிமிடட் சம்பள விபரங்கள் மற்றும் வங்கிக்கும் பின்வரும் ஊழியருக்குமிடையில் கையெழுத்திட்டப்பட்ட ஒப்பந்தங்களுடன் ஒப்பிடும் போது முன்னால் தலைமை நிர்வாக அதிகாரிக்கு ரூபா 12,049,451 தொகை மேலதிக கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது.<br><br>மேலும் 2005 நவம்பர் முதல் 2017 அக்டோபர் வரை ரூபா 2,505,060 சம்பள நிலுவைத் தொகையை வங்கி அவருக்கு மாத சம்பளத்திற்கும் மேலாக செலுத்தியது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கண்டிப்பாக உரிமைக் கொடுப்பனவுகளுக்கு அமைய ஒழுக வேண்டும். |

| | | |
|---|---|---|
| (iii) ரொக்கம், ஏடிஎம் ரொக்கம் மற்றும் தங்க நகைகள் தொடர்பான கிளைக் காப்பீட்டு வரம்புகளை மீறிய பல நிகழ்வுகள் காணப்பட்டன. | காப்பீட்டு வரம்பில் விழிப்புடன் இருக்கவும் அதன்படி செயல்படவும் முகாமையாளருக்கு அறிவுறுத்தப்பட்டது. | காப்பீட்டு வரம்புகளை போதுமான அளவு அதிகரிக்க வேண்டும். |

**3.4 கடன்களும் முற்பணங்களும்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2018 டிசெம்பர் 31 நிலவரப்படி மொத்த நிலுவைத் தொகை ரூபா 1,271,018 மில்லியன் மற்றும் அதில் ரூபா 31,472 மில்லியன் அல்லது 2.48 சதவீதம் செயல்படாத கடன் (எஸ்.பி.எல்) இருப்பு எனக் காட்டப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த செயல்படாத இருப்பு ரூபா 11,899 மில்லியன் அல்லது 61 சதவீதம் அதிகரித்துள்ளது. | அவதானிக்கப்பட்டது. | கடந்த கால நிலுவைத் தொகையை முறையாக மீட்டெடுக்கும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் மற்றும் இயல்பு நிலைகளைத் தடுக்க கடன் ஒப்புதலுக்கு முன்னர் வாடிக்கையாளர் மற்றும் பாதுகாப்பு குறித்து சரியான மதிப்பீட்டைச் செய்ய வேண்டும். |
| (ii) 2018 டிசெம்பர் 31 திலவரப்படி வங்கியின் முதல் 10 செயல்படாத கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 39,300.7 மில்லியனாகும். ரூபா 13,119 மில்லியன் மூலதனமும் ரூபா 26,109 மில்லியன் வட்டியும் பதிவு செய்துள்ளது. | அவதானிக்கப்பட்டது | நிலுவைத் தொகையை திருப்திகரமாக மீட்டெடுக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |
| (iii) ரூபா 895.91 மில்லியன் பெறுமதியான செயல்படாத கடன்கள் மற்றும் முற்பணங்கள் 2018 ஆம் ஆண்டில் பதிவழிக்கபட்டது. இதில் ரூபா 254.8 மில்லியன் மூலதனமும் ரூபா 641 மில்லியன் பெறுமதியான வட்டி மற்றும் ஏனைய கட்டணங்கள் உள்ளடங்கும். | அவதானிக்கப்பட்டது. | நிலுவைத் தொகையைத் தடுப்பதற்காக இயல்பு நிலைகளில் கடன் திருப்பிச் செலுத்துவதை உடனடியாக நெருக்கமாகப் பின்தொடர வேண்டும். |
| (iv) | | |
| (அ) **கடன் இலக்கம் :- 1428001000005462** | | |
| உப்பு தூளாக்கும் இயந்திரம் (Plant) ஒன்றை கொள்முதல் செய்வதற்காக இயக்குனர்கள் ஒருவரின் | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நிறுவன இயக்குனர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவைத் தொகையை மீட்க நடவடிக்கை எடுக்கவும். |

தனிப்பட்ட உத்தரவாத்தின் அடிப்படையில் 2015 பெப்ரவரி 13 அன்று 120,000 அமெரிக்க டொலர் (ரூபா 15.6 மில்லியன்) கடன் வழங்கப்பட்டது.

2016 நவம்பர் 13 அன்று இக் கடனானது செயலற்ற வகைக்கு மாற்றப்பட்டது மற்றும் 2018 மே 30 அன்று ரூபா 7.7 மில்லியன் முழு நிலுவையாக இருந்தது. பல ஏலங்கள் வங்கியால் நடாத்தப்பட்டிருந்தாலும் அந்த பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தால் இயந்திரத்திற்கு கடுமையான சேதம் ஏற்பட்டதால், மேற்கூறிய இயந்திரத்தை நியாயமான விளைவில் மனு விற்பனை செய்ய வங்கி தவறியது. மேலும் தனிப்பட்ட உத்தரவாதர்களுக்கு இதனை திருப்பிச் செலுத்தும் திறன் இல்லை என்பதை காண முடிந்தது.

(ஆ) **கடன் இலக்கம் :- 1428001000005499 மற்றும் 1428001000005453**

-------------------------------------------

மூலதன மற்றும் வணிகத் தேவைக்காக ஒரு நிலத்தை வாங்குவதறகாக ரூபா 5 மில்லியன் மற்றும் ரூபா 15 மில்லின் கடன் வசதிகள் வழங்கப்பட்டன. இதற்காக அடமானமாக முன்மொழியப்பட்ட நிலத்தை வைத்திருந்தது.

2014 டிசெம்பர் 24 திகதியிடப்பட்ட டிஜிஎம் மதிப்பீட்டுக் குழவின் மதிப்பீட்டின் படி நிலத்தின் சந்தைப் பெறுமதி ரூபா 19 மில்லியனாக இருந்தது. இவ்விரு கடன்களுக்கும் போதுமான பாதுகாப்பு இல்லாதிருந்தது.

மூலதன தேவவைக்காக ரூபா 5 மில்லியன் மற்றும் நிலம் வாங்குவதற்கும் கட்டிடம் கட்டுவதற்கும் ரூபா 15 மில்லியன் வழங்கப்பட்டது. ரூபா 19 மில்லியன் மதிப்புள்ள நிலம் வாங்கப்பட்டது. இது கடன் வசதிகளுக்கு பாதுகாப்பாக வழங்கப்பட்டது. கட்டிட கட்டு மானத்திற்கு பிறகு FSV ரூபா 25.9 மில்லியனாக இருந்தது. எனவே கட்டுமானத்திற்கு பிறகு சொத்து மதிப்பின் அடிப்படையில் வசதி வழங்கப்பட்டது.

காப்பீட்டு அடிப்படையில் அவர்கள் வெள்ளம்

நிலுவைத் தொகையை மீட்க நடவடிக்கை எடுக்கவும்.

வணிகம் மற்றும் கட்டிடத்தின் இருப்பிடம் குறித்து சாத்தியக் கூறு ஆய்வு மற்றும் தள அவதானிப்பை வங்கி செய்திருந்தாலும் இந்த நிலம் மற்றம் கட்டிடம் ஒரு நதிக்கு அருகாமையால் இருப்பதனால் இதனை வெள்ள அபாய காப்பீடு செய்வதற்கான சிறப்பு நிபந்தனைகள் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பவில்லை. பின்னர் இந்த வசதிகள் செயல் படாத வகைக்கு மாற்றப்பட்டதுடன் 2016 நவம்பர் 27 அன்று கடிதத்தின் படி வணிகத்திற்கு ஏற்பட்ட வெள்ள சேதம் குறித்து வாடிக்கையாளர் வங்கிக்கு அறிவித்திருந்தார். மேற்கண்ட அபாயம் காரணமாக வணிகத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு சொத்தின் மதிப்பு குறைவடைந்தது. ஆகையால் நிலுவையில் உள்ள கடன் தொகையை மீட்டெடுப்பதற்காக ஏலத்தின் போது வங்கியின் நியாயமான விலைக்கு விற்பனை செய்ய முடியவில்லை. கடன் வழங்கும் செயன்முறையின் பலவீனங்கள் காரணமாக வங்கிக்கு ரூபா 4.6 மில்லியன் மற்றும் ரூபா 19.5 மில்லியன் நட்டம் ஏற்பட்டது

உள்ளிட்ட அனைத்து சேதங்களையும் ஈடுகட்டியுள்ளனர் இந்த சம்பவம் நடந்த நேரத்தில் காப்பீட்டு நிறுவனம் இயந்திரத்தை சரிசெய்ய ரூபா 400,000 செலுத்த ஒப்புக்கொண்டது ஆனால் விண்ணபதாரர்கள் அந்த அளவு போதுமானதாக இல்லை என்று குறிப்பிட்டார். வழக்கமாக இது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடம் அல்ல, இது கடன் மதிப்பை வழங்குவதற்கு முன்னர் செய்யப்பட்ட வெளி மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அடுத்தடுத்த எதிர்பாராத நிகழ்வுகள் காரணமாக இந்த நிலம் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டது.

(v) **கடன் இலக்கம் :- 239100160874409**

**--------------------------------------------**

வங்கி நடைமுறைக் கணக்கை திறந்த நாளிலிருந்து 9 நாட்களுக்குள் மேற்கண்ட வாடிக்கையாளருக்கு ரூபா 93.34 மில்லியன் தற்காலிக மேலதிகப்

ரணசிங்க ஹோம்ஸ் (பிரைவேட்) லிமிடெட் ஜா-எல கிளையில் ஒரு வாடிக்கையாளராக

நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட

| | | | |
|---|---|---|---|
| | பற்று (TOD) வசதியை வழங்கியிருந்தது. இருப்பினும் வங்கி மேலதிகபற்றை பெற்றுக்கொள்ள நடைமுறைக் கணக்கில் திருப்திகரமான வைப்புத் தொகையை குறைந்த பட்சம் ஆறு மாதங்களுக்கு பராமரிப்பதற்கு வங்கியின் தங்க நகைகள் அடகு வையேட்டின் 9.3.1 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டிருப்பினும் வங்கி இதனை கடைப்பிடிக்காமையால் 2008 செப்டெம்பர் 8 அன்று மேற்கூறிய வசதி செயற்படாத வகைக்கு மாற்றப்பட்டது.<br>கணக்காய்வின்போது மொத்த நிலுவை ரூபா 333.56 மில்லியனாக இருந்தது இதில் ரூபா 95.90 மில்லியன் மூலதனமும் ரூபா 237.65 மில்லியன் வட்டியும் ஆகும். | இருந்தார். மேலும் அந்தக் காலத்தில் பணியில் இருந்த வங்கியின் முகாமையாளர் ஒழுக்காற்று நடவடிக்கையை மீறியதால் சேவையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார். பொறுப்பான ஊழியர்களை இடைநீக்கம் செய்வதன் மூலம் வெளிவந்த சுற்றறிக்கைகள் மற்றும் மோசமான நிர்வாக நடைமுறைகளை மீறுவது குறித்து வங்கி நடவடிக்கை எடுத்ததுடன், ரணசிங்க ஹோம்ஸ் மற்றும் அதன் இயக்குனர்கள் மீது நிலுவைத்தொகையை வசூலிக்க நீதிமன்ற நடவடிக்கை தொடங்கப்பட்டது. இன்னும் பதிவழிப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.<br><br>(391/12/எம்ஆர்) | வேண்டும். |
| (vi) | **கடன் இலக்கம் :- 239100180786341**<br>---------------------------------------------<br>ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் இயக்குனராக பணிபுரிந்த ஒரு வாடிக்கையாளர் நடப்புக் கணக்கை 1999 ஆகஸ்ட் 9 அன்று ரூபா 15,000 வைப்பிலிடுவதன் மூலம் ஆரம்பித்தார் மற்றும் 2005 செப்டெம்பர் 2 ஆம் திகதி அவரின் வங்கி மேலதிகப்பற்று நிலுவை ரூபா 3.25 மில்லியன். அதன் பின்னர் மேலதிகப்பற்று வரம்பை அதிகரிப்பதன் மூலம் வரவு நிலுவைத் தொகை புதிய நடப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டது. மேலதிக வசதி ரூபா 82 மில்லியன். இதனை உன்னிப்பாக கண்காணிக்காததால் 2008 டிசம்பர் 29 அன்று செயல்படாத வகைக்கு மாற்றப்பட்டதுடன் 2018 மே 31 இல் நிலுவைத் தொகை ரூபா 290 மில்லியனாகும் | ஜா-எல கிளையின் மேற்கூறிய கடன்கள் மற்றும் TOD அனைத்தும் 2008 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டமை அந்த காலகட்டத்தில் பணிபுரிந்த கிளை முகாமையாளர் வங்கி ஒழுங்கு நெறிமுறையின் கீழ் சேவையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார். | நிலுவைத் தொகையை மீட்க தகுந்த நடவடிக்கை எடுக்கவும். |

(vii) **ஹியாட் ஸ்டீல் (பிரைவேட்) லிமிட்டட்**

--------------------------------------------

வங்கியானது 1993 இலிருந்து 1996 காலப்பகுதியின் போது மேற்கூறப்பட்ட கம்பனிக்கு ரூபா 153,054,406 பெறுமதியான ஏழுவசதிகள் உள்ளடங்கிய கடன் பொதியொன்றை வழங்கியிருந்ததுடன் அதனை தொடர்ந்து அந்த வசதிகள் செயலற்ற கடன் வகைக்கு மாற்றப்பட்டது. நிறுவனம் 2005 ஒக்டோபர் 20 அன்று தனது செயற்பாடுகளை நிறுத்தியுள்ளது. அடமான சொத்தை அப்புறப்படுத்துவதன் மூலம் வங்கியின் மொத்த நிலுவைத் தொகையை மீட்டெடுக்க முடியவில்லை. மற்றும் 2018 ஜீன் 25 இல், மொத்த நிலுவை ரூபா 333,161,760 ஆகும்.

அடுத்தடுத்த ஒப்புதல்களை பி/பி எண் 015/96, 453/98 மற்றும் 925/98 களின் மூலம் பெற்றுக் கொண்ட போதிலும் வசதியை அங்கீகரிக்கும் போது பணப்புழக்கத்துடன் திருப்பிச் செலுத்தும் திறனும் கவனத்தில் எடுக்கப்பட்டிருந்தது.
மீட்க எந்த வழியும் இல்லாததால் ரூபா 81.07 மில்லியனுக்கும் அதிகமான கடனை பதிவழிக்க வங்கி முடிவு செய்திருந்தது. 2005 டிசம்பர் 29 அன்று அடமானச் சொத்தை அப்பட்டமாக நிறைவேற்றிய (Parate Execution) உடனேயே ஹியாட் ஸ்டீல் (பிரைவேட்) லிமிட்டட் செயல்பாட்டு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தப்பட்டது.
வாங்கிய அடமானச் சொத்து நிலம், உலோகக் கட்டமைப்புகள்,இயந்திரங்கள், உபகரணங்கள், மற்றும் அவற்றின் பெரும்பாலானவை எளிதில் நகரக் கூடியவை.
ஆகவே சொத்துக்களை பாதுகாக்க அவுட் சோர்ஸ் பாதுகாப்பு தனிநபர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.
மேலும் மதிப்பீட்டு அறிக்கை இப்போது எடுக்கப்பட்டுள்ளது.
மூன்றாம் தரப்பினரின் வழக்கு காரணமாக வாங்கிய அடமான சொத்துக்களை அகற்றுவது கடிமை.
எவ்வாறாயினும், வழக்கு சமரச தீர்வுகாணப்படுவதற்கும் வங்கிக்கு ஏற்படும் இழப்பைக் குறைப்பதற்காக வாங்கிய சொத்துக்களை அப்புறப்படுத்துவதற்கும் சாத்தியங்களை கண்டறியும் பணியில் வங்கி ஈடுபட்டுள்ளது.

நிலுவையை மீட்க நடவடிக்கை எடுக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| | | நிலமையைக் கருத்தில் கொண்டு 3 வது தரப்பு வழக்குகளுக்கு மத்தியில் சொத்தை அப்புறப்படுத்த வங்கி முடிவுசெய்துள்ளது. அதன்படி, பொது டென்டர்கள் அழைக்கப்பட்டன. ஆனால் அகற்றுவது இன்னும் உறுதி செய்யப்படவில்லை. | |
| (viii) | **கொலம்போ லங்கா இன்டஸ்டீஸ் லிமிடட்**<br>---------------------------------------------------------- | | |
| | நிறுவனமானது ஒரு குடும்ப சம்பந்தமான வரையறுக்கப்பட்ட பொறுப்பு மற்றும் 200ஆடைத்திட்டத்தின் கீழ் ஆடை வியாபாரத்தில் ஈடுபடுவதற்கான நோக்கத்தில்இணைக்கப்பட்டது.<br><br>முற்றும் சர்வதேச பிரிவினால் வழங்கப்பட்ட இக்கடன் தொகையானது 2000 ஆம் ஆண்டில் செயளற்ற கடனாக மாறியது. 2018 ஜீன் 25 இல் மொத்த நிலுவை தொகை ரூபா45,363,519 ஆகும். வங்கி நிறுவனத்தின் மீது வழக்கு தொடர்ந்திருந்த போதும் நம்பிக்கை ரசீது, உறுதி மொழி குறிப்பு மற்றும் விண்ணப்பம் போன்ற ஆவணங்களின் முழுமையற்ற தன்மையால் வங்கிக்கு முன்னேர முடியவில்லை. | நிறுவனத்தின் ஒரு இயக்குநரும் அடமானகாரரும் காலமானார். இயக்குநர் திரு.தம்பாவிதா மற்றும் அவர்களது மூன்று குழந்தைகள் வங்கி தாக்கல் செய்த சோதனை நடவடிக்கையில் பிரதிவாதிகளாக மாற்றப்பட்டனர். இவர்களின் சரியான முகவரியை கண்டறிய முடியாமையால் அவர்கள் மீது சமன் அனுப்புவது கடினம். கொலம்போ லங்கா இன்டஸ்டீஸ் லிமிடட் பெற்ற கடனை தீர்ப்பதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டது. இணைக்கப்பட்ட கெலக்ஷி குரூப் கார்மன்ட்ஸ் (பிரைவட்) லிமிடட் பெற்ற கடன்கள் பதிவழிக்கப்பட்டன. | நிலுவைத் தொகையை மீட்க தகுந்த நடவடிக்கை எடுக்கவும். |
| (ix) | **சிடி கன்ஸ்டக்ஸ்ஷன் (பிரைவட்) லிமிடட்**<br>---------------------------------------------------------- | | |
| | வங்கி ஆரம்பத்தில் ரூபா 350 மில்லியன் கடன் வசதியை ஒரு ஆடம்பர கொண்டமோனியம் அடுக்குமாடி கட்டிடம் கட்டுவதற்காக 2007 ஆம் ஆண்டு வழங்கியது. பல்வேறு காரணங்களால் இத்திட்டம் தோல்வியடைந்தது. தற்போதுள்ள வசதிகளை வங்கி பலமுறை மாற்றியமைத்தது. பின்னர் இத்திட்டம் நிறுவனத்தின் நிர்வாக மாற்றத்துடன் ஹோட்டல் திட்டமாக மாற்றடைந்தது. இத்திட்டமானது 2015 டிசம்பரில் | நிறுவனம் நடைமுறைக் கணக்கு இலக்கம் 309100352536720 ஐ இயக்கியுள்ளதுடன். ஹோட்டல் வருமானத்தை தினமும் அவரது கணக்கு மாற்றியுள்ளது.<br><br>வாடிக்கையாளரின் கோரிக்கைக்கு அமைய திரட்டப்பட்ட வட்டியில் இருந்து ரூபா 100 மில்லியன் செலுத்த ஒப்புக் கொண்டார். <u>டீநுஊஊ</u> | நிலுவையை அறவிட முறையான நடவடிக்கைகளை மேற்கொள்க. |

முடிவடைந்த போதிலும் வாடிக்கையாளர் வழங்கிய அனைத்து கடன் வசதிகளையும் மீளச் செலுத்தத் தவறிவிட்டார். மற்றும் பாதுகாப்பை ஏலமிட வங்கி முடிவு செய்தது. இருப்பினும் வாடிக்கையாளரின் மறுசீரமைப்பு கோரிக்கைகளின் அடிப்படையில் ஏலத்தை நிறுத்தியது கவனிக்கப்பட்டது. 2018 நவம்பர் 12 இல் ஆறு வசதிகளுக்கு சொந்தமான மொத்த நிலுவை ரூபா 890.64 மில்லியன் தொகை மீட்கப்படாமல் காணப்பட்டது. ஆரம்ப வசதியை வழங்கும் நேரத்தில் மொத்த திட்டச் செலவில் 50% ஐ விட அதிகமாக இருக்கக் கூடாது. என்று வங்கி ஒரு சிறப்பு நிபந்தனை விதித்திருந்தாலும், மொத்த திட்ட வசதிகளில் 50% க்கும் அதிகமான மொத்த கடன் வசதிகளை வங்கி வழங்கியுள்ளது.

இலக்கம் 88/2012 ஆல் அங்கீகரிக்கப்பட்ட மறுசீரமைப்புத் திட்டத்தை வங்கி செய்துள்ளது. 31.03.2012 வரை (14% மற்றும் 10% சலுகை விதித்ததுடன் ) திரட்டப்பட்ட வட்டிக்கு ரூபா 181.72 மில்லியனாக இருந்தது.

அங்கீகரிக்கப்பட்ட காகிதத்தின்படி வழங்கப்பட்ட ரூபா 50 மில்லியனுக்கு உரிய வட்டி மற்றும் வட்டி மூலதனக் கடனில் இருந்து ரூபா 100 மில்லியன் வங்கி மீட்டுள்ளது. ஒரு சலுகையாக வங்கி ரூபா 31.72 மில்லியன் திரட்டியவட்டி தள்ளுபடி செய்தது. (இது திரட்டப்பட்ட வட்டிக்கு 17.45% ஆகும்)

(x) **செய்ட் டீ (பிரைவேட்) லிமிட்டட்**

---

.

மேற்கண்ட வாடிக்கையாளருக்கு வங்கி கடன் வசதிகளை வழங்கியிருந்தது. பின்னர் அந்தக் கடன்கள் செயல்படாத வகைக்கு மாற்றமடைந்தன. 2018 ஜீன் 25 இல் மொத்த நிலுவை தொகை ரூபா 98,798,666 ஆகும்.

அடமானம் செய்யப்பட்ட சொத்துக்கள் அப்புறப்படுத்தப்பட்டன மற்றும் விற்பனை வசூல் அடிப்படையில் ஏற்றுமதி நடவடிக்கைகளை பகிர்ந்தளித்தது. வணிகத்தின் சரிவை ஏற்படுத்தியுள்ளது. மற்றும் வசதிகள் மீளச்செலுத்த தவறிவிட்டன. திரு.ஜமால்தீன் மற்றும் திருமதி.நவ்ஸாட் ஆகியோர் கிராமிய தம்பதிகள் நிதிரீதியாக மீளச்செலுத்தும் சக்தியற்றவர்கள் மற்றும் பொறுப்பைச் சந்திக்க சக்தி மிக்க சொத்துக்கள் இல்லை என அறியப்பட்டது.

நிலுவையை அறவிட முறையான நடவடிக்கைகளை மேற்கொள்க.